

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.3.2026) சென்னையில் நடைபெற்ற, சுரேஷ் – திருமதி கலாவதி தம்பதியரின் மகன் அரவிந்த் – மௌனா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். உடன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் உள்ளார்.

### தருமபுரி மாவட்டத்தில் ரூ. 15.39 கோடியில் முடிவுற்ற 33 திட்டப்பணிகள்!

# ரூ.33.96 கோடியில் 421 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் - 28,639 பயனாளிகளுக்கு அரசு நல உதவிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மார்ச் 16–

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் 15.39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 33 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 33.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 421 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 28,639 பயனாளிகளுக்கு 254.59 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.3.2026) தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்ற விழாவில் தருமபுரி மாவட்டத்தில் 15.39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 33 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 33.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 421 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 28,639 பயனாளிகளுக்கு 254.59 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பொதுப்பணித்துறை, நீர்வளத்துறை, பழங்குடியினர் நலத்துறை, பொது நூலகத்துறை ஆகிய துறைகளின் மூலம் 15.39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப் பட்ட 33 முடிவுற்ற திட்டப்பணி களை திறந்து வைத்து,

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பொதுப்பணித்துறை ஆகிய துறைகளின் மூலம் 33.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 421 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் 4,195 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணைகள்,

வருவாய்த் துறையின் சார்பில் 1,328 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 69 பயனாளிகளுக்கு நிவாரண உதவித் தொகை, கல்வி உதவித்தொகை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள்,

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள், 40 பயனாளிகளுக்கு தேய்ப்பு பெட்டிகள், கூட்டுறவுத் துறையின் சார்பில் 630 பயனாளிகளுக்கு கால் நடை பராமரிப்பு கடன், பயிர்கடன் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு கடனுதவிகள்,

மகளிர் திட்டத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 9,297 மகளிருக்கு வங்கிக் கடன் இணைப்புகள், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் 20 விவசாயிகளுக்கு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஆழ்துளை கிணறு அமைத்தல், முதலமைச்சரின் சூரிய சக்தியில் இயங்கும் மின் மோட்டார் பம்பு செட் அமைத்தல் உள்ளிட்ட இயந்திரமயமாக்கல் நலத்திட்ட உதவிகள், வனத்துறையின் சார்பில் 24 பயனாளிகளுக்கு சுழல் நிதி கடனுதவிகள்,

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 40 பயனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில் 200 மீனவர்களுக்கு மீனவர் நலவாரிய அடையாள அட்டைகள், தாட்கோ திட்டத்தின் சார்பில் 20 பயனாளிகளுக்கு பழங்குடியினர் துரித மின் இணைப்புகள், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறையின் சார்பில் 200 நபர்களுக்கு முதலமைச்ச ரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்ட அடையாள அட்டைகள்,

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் 6 பயனாளிகளுக்கு தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்ட மானிய உதவிகள், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில் 500 தொழிலாளர்களுக்கு புதிய பதிவு அட்டைகள், வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் 706 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகள், வேளாண்மைத்துறையின் சார்பில் 26 பயனாளிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணையம் அமைப்பதற்கான உதவிகள், பால்வளத்துறையின் சார்பில் 11,187 பயனாளிகளுக்கு கூடுதல் ஊக்கத் தொகை காசோலைகள், சமூக நலத்துறையின் சார்பில் 75 பெண்குழந்தைகளுக்கு இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வைப்புத் தொகை ஆணைகள்,

பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலையின் சார்பில் 11 பயனாளிகளுக்கு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்ட மாதிரி வயல்கள் அமைக்க உதவிகள், முன்னோடி வங்கியின் சார்பில் 10 மாணவர்களுக்கு கல்விக் கடனுதவிகள், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 50 பயனாளிகளுக்கு நுண்ணீர் பாசனம் அமைப்பதற்காக உதவிகள் என மொத்தம் 28,639 பயனாளிகளுக்கு 254.59 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, மாவட்ட ஆட்சித் தலைவர் ரெ.சதீஸ், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி இரா.கவிதா, தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் மேலாண்மை இயக்குநர் மாவட்ட வருவாய் அலுவலர் வீ.இரவி, திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) ஜெ.ரூபன் சங்கர் ராஜ் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – இன்று

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் “தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்” இன்று (16-03-2026 - திங்கட்கிழமை) காலை 10.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம் “கலைஞர் அரங்கில்’’ நடைபெறும்.**

**அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.**

**பொருள் : 2026 சட்டப்பேரவைத் தேர்தல்**

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18,

### கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகளில்

# பணியாற்றும் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு!

சென்னை, மார்ச். 16–

தமிழ்நாட்டில் மாவட்டந்தோறும் உள்ள நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளில் பணியாற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் 01.04.2025முதல் 10%சதவிகிதத்திற்கு மேல் 22%சதவிகிதம் வரை ஊதிய உயர்வினை வழங்கிய தமிழ்நாட்டு முதலமைச்சர் உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் உன்னத தலைவர் திராவிட மாடல் நாயகன் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும்,துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும்,கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.

### முதல்வருக்கு – கூட்டுறவு பண்டக சாலை தொ.மு.ச. நன்றி!

பெரியகருப்பன் அவர்களுக்கும், எங்களுக்கு வழிகாட்டியாகவும்,இந்த ஊதியஉயர்வு ஆணை பெறுவதற்கு தொடர்ந்து பதிவாளர்அவர்களிடம் பேசி பெற்றுத்தந்திட பேருதவி புரிந்த பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் , கூட்டுறவு சங்கங்களின்பதிவாளர்அவர்களை சந்திக்கும் போதெல்லாம் நம்முடைய ஊதியஉயர்வு குறித்து பேச்சு வார்த்தை நடத்திய பேரவைத்தலைவர் .கி.நடராசன், ஊதிய உயர்வுக்குழுவுடன் பேச்சு வார்த்தை நடத்திஇந்த ஊதியஉயர்வு ஆணையைப் பெற்றுத்தர முழு முயற்சி செய்த பொருளாளர் கோசி.வள்ளுவன், துணைத்தலைவர். இரா. பொன்னுராம் அவர்களுக்கும்,உணவுமற்றும்கூட்டுறவு,நுகர்வோர்பாதுகாப்புத்துறை முதண்மை செயலாளர் K.S.பழனிச்சாமி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் முனைவர் க.நந்த குமார் அவர்களுக்கும்,கூடுதல் பதிவாளர்/ நுகர்வோர்பணிகள், ஊதிய சீரமைப்புக் குழுத்தலைவர் முனைவர். மு.வீரப்பன், குழு உறுப்பினர்கள், இணைப்பதிவாளர் (நு.ப) முரளி க்கண்ணன்அவர்களுக்கும்! துணைப் பதிவாளர் (நுகர்வோர்பணிகள்) S.பாலசுப்பிர மணியன் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும், மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் தொ.மு.ச நிர்வாகிகள் அனைவருக்கும் தமிழ்நாடு மாநில நுகர்வோர்கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் தொ.மு.ச.சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை தொழிலாளர்கள் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறோம் என்று அச்சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் சு.பத்மநாபன் தெரிவித்துள்ளார்.




தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க.சார்பில் ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி சட்டமன்றத் தேர்தல் 2026 தேர்தல் பணிகள் ஆலோசனைக் கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள ஜெய் சாந்தி மகாலில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.உடன் அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்,முன்னாள் எம்.பி.க்கள் ஓ.பி.ரவீந்திரநாத், கோபாலகிருஷ்ணன்,முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் அய்யப்பன், முத்துச்செல்வி,உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.


